## பிப்ரவரி - 8

**"அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்? - மத் 14 : 31**

இந்த விசுவாசத்தின் குறைவை சமாளிக்கவும், விசுவாசத்தை விருத்தி செய்யவும் என்ன செய்யப்பட வேண்டும்? நம்முடைய உத்தரவு என்னவென்றால், பழைய அப்போஸ்தலரைப்போல, "கர்த்தாவே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணும்" என்று ஜெபம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு இந்த ஜெபத்திற்கு இசைவாக நடந்து, ஒவ்வொருவரும் தன்னுடைய சொந்த இருதயத்தில் கீழ்க்கண்ட விதமாக, விசுவாசத்தை விருத்தி செய்ய வேண்டும். தெய்வீக வாக்குத்தத்தங்களால் தன் மனதின் ஞாபக சக்திக்குத் தொடர்ந்து புத்துயிர் அளித்து, தேவனுடைய வார்த்தையில் இவைகளை நன்றாகத் தெரிந்தவர்களாகிவிட வேண்டும். கர்த்தரோடு உடன்படிக்கை செய்து கொண்டிருப்பதின் நிமித்தம் இந்த வாக்குத்தத்தங்கள் தன்னுடையவைகள் என்று இவைகளை அதிகமதிகமாக ஞாபகப்படுத்த நாட வேண்டும். மேலும் தன்னுடைய இருதயத்திலும் உதடுகளினாலும் கர்த்தருக்கு முன்பாக ஜெபத்தில் ஸ்தோத்திரம் செலுத்துதலோடு அவைகளை தன்னுடையவைகளென்று உரிமை கொண்டாட வேண்டும். தனது சொந்த எண்ணங்களிலும், சகோதரரோடு நடக்கும் பரிசுத்த காரியங்களுக்கடுத்த பேச்சுக்களிலும், இவைகளுக்காக உரிமை கொண்டாட வேண்டும். **- Z ’00 , 170 (R 2642).**

தெளிவுபடுத்துவதற்கு வியப்பூட்டும் அதிசய காரியங்களில் ஒன்று, என்னவென்றால், சந்தேகப்படும் கிறிஸ்தவன், தனது ஆணையின் கீழ் சகலத்தையும் அவனுடைய நன்மைக்கேதுவாக அமைக்க வாக்குக் கொடுக்கும் பூரண ஞானமுள்ள நீதியுள்ள, அன்புள்ள, வல்லமையுள்ள ஒரு தேவன் தன்னோடு இருக்கையில் அவனுடைய எல்லாக் குறைகளையும் நிரப்பி, எல்லாத் தப்பிதங்களிலிருந்தும் அவனை நீக்கி, அவனை எல்லா நன்மையாலும் பூரணப்படுத்தி ஆவியால் ராஜ்யத்திற்காக ஒரு ஆளாக அவனை உண்டு பண்ணி அதை அடைவதற்கு வேண்டிய சகலவற்றையும் கொடுக்கிற ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாகிய ஒரு இரட்சகர் அவனுக்கு இருக்கையில், அவன் ஏன் சந்தேகப்பட வேண்டும்? **- P ’34, 15.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோபு 30:20; சங் 22:2; 31:22; 42:5,6; 49:5; 73:13-17; 77:3, 7-9; நீதி 24:10; ஏசா 40:27,28; 49:14,15; எரே 8:18; 15:18; 45:3; புலம் 3:8,17,18; 5:20; மத் 8:23-27; 14:29-31; 17:14-21; 28:17; மாற் 4:38-40; ஆதி 12:12,13; யாத் 14:10-15;

**கோபுர வாசிப்பு : Z ’14, 88 (R 5424).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் விசுவாசமுள்ளவனாயிருந்தேனா? அல்லது சந்தேகமுள்ளவனாயிருந்தேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? கிடைத்த பலன் என்ன?